**செ.வெ.எண்: 102 / ஜுலை / 2021** **நாள்: 27.07.2021**

**செய்திக் குறிப்பு**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் தற்காலிகமாக கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்கு முற்றிலும் ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு 12 மருந்தாளுநர் பணியிடங்கள் மாதம் ரூ.12,000/- வீதம் ஒப்பந்த ஊதியத்தில் நிரப்பிட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மருந்தாளுநர் பணிக்கு தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இரண்டு ஆண்டு கால பட்டய படிப்பு (D.Pharm) முடித்திருக்க வேண்டும். மேலும், தமிழ்நாடு மருந்தாளுநர் கவுன்சிலில் முறையே பதிவு செய்து (Registered Under TamilNadu Pharmacy Council) நாளது தேதி வரை புதுப்பித்திருக்க வேண்டும். மேலும், இப்பணியிடங்கள் முற்றிலும் தற்காலிகமானது. நிரந்தர பணிநியமனம் வழங்கப்படமாட்டாது. இந்த பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் திருச்சிராப்பள்ளி மாவட்ட துணைஇயக்குநர் சுகாதாரப்பணிகள் அலுவலகத்தில் 28.07.2021 முதல் பெற்றுக் கொள்ளலாம். 05.08.2021 மாலை 5.00 மணிக்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி நாள்.**

**05.08.2021, செவ்வாய்கிழமை மாலை 5.00 மணி வரை.**

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :**

**துணைஇயக்குநர் சுகாதாரப்பணிகள் அலுவலகம்,**
**ரேஸ்கோர்ஸ் ரோடு, ஜமால்முகம்மது கல்லூரி அருகில்,**
**வ.ஏ.ளு. டோல்கேட், திருச்சிராப்பள்ளி - 620 020.**
**தொலைபேசி எண். 0431 - 2333112.**

நேர்காணல் ஆகஸ்டு மாதம் 09.08.2021மற்றும்10.08.2021தேதிகளில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மூன்றாம் தளத்தில் நடைபெறும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**